**CC 224/2018, 06.04.2023**

**அ.சா.1 ஆறுமுகம் (குறுக்கு விசாரணை)**

நான் மொரப்பூர் வனசரகத்தில் பணிபுரிந்தபோது மொத்தம் 26 நபர்கள் பணிபுரிந்து வந்தோம். ரோந்துபணிக்கு செல்லும் பணிக்கான ஆவணங்கள் ஏற்படுத்திக்கொள்வோமா என்றால் இல்லை. சம்பவதினத்தன்று அரூர் – மொரப்பூர் சாலையில் உள்ள அரூர் செம்மரக்காட்டில் இருந்து ரோந்து பணியை தொடங்கினோம். அரூர் செம்மரக்காட்டில் ஒன்றுகூடினோம். 07.04.2015ம் தேதி இரவு 1 மணிக்கு ரோந்து பணியை தொடங்கினோம். நாங்கள் ரோந்து பணியை சாலையில் 16 நபர்கள் செய்துகொண்டிருந்தோம். இரவு 1 மணியில் இருந்து விடியற்காலை 3 மணி வரை மேற்படி சாலையில்தான் ரோந்துபணி மேற்கொண்டோம். 2–3 மணி வரை நான்கு சக்கர வாங்கள் எதுவும் செல்லவில்லை. இருசக்கர வாகனங்கள் மட்டுமே சென்றது. அந்த வாகனங்களை மட்டும் பரிசோதனை செய்தோம். அவ்வாறு சுமார் 15 இருசக்கர வாகனங்களை பரிசோதனை செய்தோம். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட இண்டிகா காரை நிறுத்த சொன்னவுடன் நிறுத்திவிட்டார்கள். அதில் இருந்து யாரும் தப்பியோட முயற்சிக்கவில்லை. அந்த காரை யார் ஓட்டிவந்தார்கள் என்று தெரியவில்லை. மொத்தம் 4 நபர்கள் காரில் இருந்தார்கள். செம்மரம் உறுதியான மரம் என்றால் சரிதான். கிளைகள் மரங்கள் இவை இரண்டுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். கிளைகள் என்பது சிறு சிறு குச்சிகளாக இருக்கும். அவை உதிர்ந்து கீழே விழுந்து மக்கிவிடும். சிறுகுச்சிகளாக உள்ள கிளைகள் பயன்படுத்த இயலாது என்றால் சரிதான். சிறு சிறு குச்சிகளாக காய்ந்து விழும் கிளைகள் ஒழுங்கற்ற முறையில் இருக்கும் என்றால் ஒழுங்கற்ற முறையிலும் இருக்கும், ஒழுங்கான முறையிலும் இருக்கும். எதிரிகளிடம் இருந்து கோடாரி, கத்தி போன்ற ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மரத்தில் இருந்து கோடாரி மற்றும் கத்தியைக்கொண்டு

வெட்டும்போது அதன் வடிவங்கள் வெவ்வேறாக இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட செம்மரங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தற்கான CP எண் பெறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கு முன் அனுமதி பெறவில்லை என்றால் மாவட்ட வன அலுவலர்களுக்கு அரசுடமையாக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்யப்படும் பட்சத்தில் நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகள் காய்ந்து கீழே விழுந்த செம்மரக்குச்சிகளை சேகாரம் செய்ததாக எதிரிகள் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் மொத்தம் 15 துண்டுகள் கைப்பற்றப்பட்டன. இந்த வழக்கில் மரத்துண்டுகளை கைப்பற்றியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட கட்டைகள் காரின் எந்த பகுதியில் இருந்தது என்றால் கார் டிக்கியில் இருந்தது. ஒவ்வொரு துண்டுகளின் நீளம் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும். நான் சொல்வதுபோல் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட கட்டைகளை காரின் டிக்கியில் வைத்து கொண்டுவர இயலாது என்றால் சரியல்ல. டாடா இண்டிகா கார் என்பது சிறிய இரக கார் என்றால் சரிதான். வழக்கில் கைப்பற்றப்பட்ட கட்டைகளின் புகைப்படங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட கட்டைகள் செம்மரக்கட்டைகள்தான் என்று உறுதி செய்ய ஆய்விற்கு உட்படுத்தினோமா என்றால் இல்லை. செம்மரக்கட்டைகளை கைப்பற்றப்பட்டவுடன் அரசுடமையாக்கி குடோனுக்கு அனுப்பிவைப்போம் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் சுமார் 1 மணி நேரம் இருந்தோம். அந்த 1 மணி நேரத்தில் வாகனங்களின் போக்குவரத்து இருந்ததா என்றால் இல்லை. அரூர்–தருமபுரி பிரதான சாலையில் எப்போதும் போக்குவரத்து இருக்கும் என்றால் அந்த சமயத்தில் இல்லை. நான் வழக்கை நிமிர்த்தமாக எதிரிகளை விசாரித்துக்கொண்டிருந்த காரணத்தினால் போக்குவரத்தை

கவனிக்கவில்லை. நான் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும், அப்படி நடந்திருந்தால் பொதுமக்களை வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்களை யார் முன்னிலையில் கைப்பற்றினோம் என்றால் நாங்கள்தான் கைப்பற்றினோம். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை அதே காரில் மொரப்பூர் வனச்சரக அலுவலக ஓட்டுனர் இராஜேந்திரன் ஓட்டிக்கொண்டு சென்றார். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் மரத்தில் இருந்து வெட்டி எடுக்கப்படவில்லை. சேகாரம் செய்யப்பட்ட வழக்கு சொத்துக்களைதான் நாங்கள் கைப்பற்றினோம். நாங்கள் செம்மரக்காப்புக்காட்டை 24 மணி நேரமும் கண்காணிப்போம் என்றால் சரிதான். அந்த மரத்தின் கிளைகள் கீழே விழுந்தால் நாங்கள் எடுத்து வைப்போம் என்றால் இல்லை. அதனை அங்கேயே விட்டுவிடுவோம். ஆனால் கிளைகள் அதிக அளவு இருந்தால் அது குறித்து மாவட்ட வன அலுவலருக்கு தகவல் தெரிவித்து அதனை கைப்பற்றி அரசுடமையாக்க அனுமதி பெற்று குடோனுக்கு அனுப்பி வைப்போம். காரின் உரிமையாளரை இந்த வழக்கில் சாட்சியாகவோ எதிரியாகவோ சேர்க்கவில்லை என்றால் நாங்கள் விசாரணை செய்த வகையில் காரின் உரிமையாளரை கண்டுபிடிக்க இயலவில்லை. கார் எங்கிருந்து வரப்பெற்றது என்று விசாரித்து தெரிந்துகொண்டோமா என்றால் இல்லை. சம்பவயிடம் குறித்து மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு எந்த மாதிரி வரைபடமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் சம்பவயிடத்தில் வைத்து பதிவு செய்தேன். டார்ச் லைட் வெளிச்சத்தில் பதிவு செய்தோம். காப்புக்காட்டில் வனத்துறைக்கு சொந்தமான செட்டில் வைத்து பதிவு செய்தோம். மேற்படி செட் தார் ரோட்டில் இருந்து சுமார் 100 அடி தொலைவில் உள்ளது. ஒப்புதல்

வாக்குமூலத்தில் கையொப்பம் முதலில் பெற்று அதன் பிறகு பூர்த்திசெய்யப்பட்டது என்றும், அதனால்தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து சுருக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும், வழக்கிற்காக நானாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் 2015 ம் ஆண்டு நடைபெற்று வழக்கு சொத்துக்களை 2017 ம் ஆண்டு அரசுடமையாக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளிடம் இருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், அவ்வாறு கைப்பற்றப்பட்டிருந்தால் உடனே வழக்கு சொத்துக்களை அரசுடமையாக்கியிருப்போம் என்றும் சொன்னால் சரியல்ல. 2017 ம் ஆண்டு ஒரு செம்மரம் காற்று அடித்து விழுந்துவிட்டது என்றும், அதனை அரசுடமையாக்கும்போது இந்த வழக்கு சொத்துக்களையும் அரசுடமையாக்கப்பட்டது என்று பொய்யாக ஆவணங்களை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. அசாஆ 8 ஆவணத்தில் மாவட்ட வன அலுவரின் கையொப்பம் இல்லை என்றால் அது நகல் ஆவணம் ஆகும். மேற்படி நகல் ஆவணத்தில் கண்காணிப்பாளர் கையொப்பம் செய்துள்ளார். அசாஆ 8 முதல் அசாஆ 12 வரையிலான ஆவணங்கள் நகல் ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை முதல் விசாரணையின்போதுதான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசாஆ 8 முதல் அசாஆ 12 வரையிலான அசல் ஆவணங்கள் இருந்திருந்தால் நீதிமன்றத்தின் பார்வைக்கு கொண்டுவந்திருப்பேன் என்றால் சரியல்ல. அசாஆ 8 முதல் அசாஆ 12 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக தற்போது தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. அ படிவத்தில் கைப்பற்றப்பட்ட கட்டைகளின் எடை 106 கிலோகிராம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எச் நமுனாவில் 116 கிலோகிராம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எச் நமுனாவில் அலுவலரின்

கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்தவிதமான செம்மரக்கட்டைகளை கடத்தவில்லை என்றும், அவர்களிடம் இருந்து செம்மரக்கட்டைகளை கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அவர்கள் உறவினர் வீடான செங்கலேரியில் இருக்கும்போது அவர்களின் வீட்டில் வைத்து எதிரிகளை கைது செய்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு அன்றைய தேதியில் எந்த ரோந்து பணியும் நடக்கவில்லை என்றும், சொன்னவாறு சொன்ன இடத்தில் எதிரிகளை கைதுசெய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**